1983 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகத் தான் சொன்னேன். ஆய்விற்கு எடுத்துக் கொள்கிற நேரத்திலே இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று சொன்னேன். ஆனால் அறிமுக நிலையிலேயே ஆரம்பித்திருக்கிறார்கள். எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் மாநகராட்சியிலே இருக்கக் கூடிய நிலைமைகளை எல்லாம் எடுத்துச்சொன்னார்கள். மன்னார்க்குடிக்கும் மாநகராட்சிக்கும் எப்படி சம்பந்தம் வந்தது என்று தெரியவில்லை. (சிரிப்பு) சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லலாம், நான் இல்லை என்று சொல்ல வில்லை. இங்கே ராஜசேகரன் அவர்களும், பாலன் அவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்றால் அவர்கள் மாநகராட்சிக்கு உள்ளிட்ட தொகுதிகளிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) உங்களுடைய ஊரும் மன்னார்குடியா? அப்படி யென்றால் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. ஆகவே இந்த சட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். அறிமுகம் செய் வதற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி—'' 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனு மதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(எ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே அச்ச உணர்வோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் குறிப்பிட்டதை நினைத்துப் பார்த்து நான் பேச கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது மயிலாடுதுறையில் இருப்பவருக்கு கோயம்புத்தூரில் உள்ளதைக் குறித்து பேசுவதற்கு என்ன தொடர்பு இருக்கிறது என்று அவர்கள் கேட்டுவிடக் கூடுமோ என்று கருதுகிறேன். ஆனால் கேட்பதாக இல்லை என்று அவர்களுடைய முகபாவம் தெரிவிக்கிறது. இந்த மசோதாவினுடைய இரண்டாவது பிரிவில் நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் தனி இடம் ஒதுக்கீடு செய்யலாம் என்பது அரசினுடைய நோக்கம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை ஒட்டித் தான் முன்னாலும் நான் குறிப்பிட்டேன். ஊராட்சிகளில் செய்யப்படுவதைப் போல, ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்படுவதைப் போல, நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுவதை முறையாகக் கொள்வதைப் போலவும், மலைவாழ் மக்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுவதைப் போலவும், பெண்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுவதைப் போலவும், எந்த காரணத்தினாலும்—காரணம் நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். நம்மைவிட மிக நன்றாக அறிந்த நாவலர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். என்னவோ அவர்கள் எனக்கு மெடல் போட்டுவிடப் போகிறார்கள் என்பதற்காக அல்ல. இந்த மாமன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று உங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன், சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் இந்த மாமன்றத்திலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? சவரத் தொழிலாளர்கள் சமுதாயத்திலே உள்ளவர்கள், சலவைத் தொழிலாளர்கள் சமுதாயத்திலே உள்ளவர்கள், இங்கே உறுப்பினர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது மட்பாண்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தினை நாம் ஆராயும்போது, மிகமிக வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையினை நாம் அடைகின்றோம். எனவேதான் நான் கேட்கிறேன், ஊராட்சிகளில் செய்ததைப் போல, நகராட்சிகளிலே, மாநகராட்சிகளிலே, தாழ்த்தப்பட்ட, மலைவாழ்மக்கள் பெண்களுக்கு தனி ஒதுக்கீடு செய்யலாம் என்ற அரசின் நோக்கத்தைப் போலவே சவரத் தொழிலாளர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கும் இடங்களை ஒதுக்க இந்த மசோதாவில் இடம் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு அமர்கின்றேன், நன்றி, வணக்கம்,

*THIRU T. VENKATAREDDI: Honourable Deputy Speaker, Sir, The Minister may not object that Hosur M.L.A. is representing Coimbatore. Hosur and Coimbatore have got relationship now. Most of the industrialists are settling down at Hosur. In that aspect he may not object me for speaking on this Bill.

I am opposing this Bill on this ground, when Minister has been challenging that AIADMK is the most democratic set up in the State they need not afraid to hold the election for the Municipalities also. Reasons given for postponement of elections are flimsy and they can be rectified before the introduction of this Bill. It was not very difficult for the Government to rectify the defects and they can hold the elections. In order to give more powers to the officials whom they think they are more representative to the Government policies that the elected representatives, they are only encouraging officials to rule the State, especially in the Municipalities and the Panchayats without allowing the representatives to represent in the Municipalities, and we are seeing in a municipalities, the misrule of the officials. Most of the elected representatives have no say in the Municipalities and also in the Panchayat Raj. There is also no Advisory Committee for these bodies, such is the case it is the bounden duty of the Government which champions the democratic set up to bring elections soon before even bring this legislation to postpone the election. I am afraid, if you extend this period, during the period of two years, at least within this Assembly elections period the Government may not bring Panchayat Elections or the Municipal elections. Only in that pretext they want to seek the Assembly's decision to postpone the elections. With these few words I oppose this bill and I request the Minister who is just now championing democratic set up to withdraw the bill and announce the elections soon.

(முற்பகல் 10-10).

* திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் சட்டசபைக்குள்ளே நுழைவதையே நான் எதிர்க்கிறேன். அதற்கு மேலே அதனுடைய பல்வேறு கட்டங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய விஷயங்களை நான் இப்பொழுது சொல்லவில்லை. அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தோடு சேர்த்து அரசியலைப் பற்றியும் பேசினால் அப்பொழுது நாங்களும் பேசிக்கொள்கிறோம்; ஆனால் அவர்கள் அப்படிப் பேசமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த மாநகராட்சி உண்டானதிலிருந்து தேர்தல் நடத்தப்படவில்லை. இப்பொழுது அவர்கள் சொல்லியிருக்கின்ற வாதம் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியது அல்ல; ஜனநாயக முறைப்படியும் செல்லுபடியாகக் கூடியது அல்ல.

அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி முதலில் ஊராட்சி மன்றங்களின் தேர்தல் நடத்துவது, பிறகு நகராட்சி மன்றங்களின் தேர்தலை நடத்துவது, பிறகு மாநகராட்சி மன்றங்

களின் தேர்தலை நடத்துவது என்ற அப்படிப்பட்ட யோசனைக்கு வந்துள்ளது என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மறுபடியும் 7 ஆம் தேதி கூட்டப் போவதாகக் குறிப்பிடுகிறார்கள். கூட்டட்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் ஆலோசிக்கட்டும். எத்தனை தடவை வேண்டுமானாலும் ஒத்தி வைத்து ஒத்தி வைத்து இதை நீட்டிக் கொண்டே போகலாம் என்ற எண்ணத்தில் ....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 7 ஆம் தேதி இந்த அவையில் இந்த மசோதாக்கள் விவாதத்திற்கு வருகின்றன என்று தான் நான் சொன்னேன். 8 ஆம் தேதி பொது விவாதம் வரும்; 7 ஆம் தேதி இந்த மசோதாக்களைச் சட்டமாக்குகின்ற முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய நிதியமைச்சரவர்கள் சொன்ன விஷயத்தின் பேரிலே நான் சொல்லவில்லை. நமது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னதைப் பற்றித் தான் நான் சொல்கிறேன். ஆகவே ....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வருகின்ற 7 ஆம் தேதி இந்தச் சட்ட முன்வடிவுகளை இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் போகிறோம்; 7 ஆம் தேதியன்று, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி முடிவு எடுக்கலாம் என்பதைப் பற்றித்தான் நான் சொன்னேன்.

*திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, அவர்கள் சொல்லும் பொழுது இப்பொழுது சொன்னதிலேயிருந்து கொஞ்சம் மாறுபட்ட முறையிலே பேசியிருக்கிறார்கள் என்பதை ரிக்கார்டுகளிலேயிருந்து பார்க்கலாம். ஏற்கனவே நடந்துள்ள கூட்டத்தைப் பற்றிக் கூட ரெஃபர் செய்தார்கள். அவர்கள் சொல்வது தப்பு என்று நான் சொல்லவில்லை. எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் இப்படியே நீட்டித்துக் கொண்டே போகலாம் என்பதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்கள் எந்த லைசென்ஸையும் அரசாங்கத்திற்குக் கொடுக்கவில்லை. நீங்கள் சொல்லும் விஷயங்களைப் பரிசீலித்து, எப்பொழுது இந்தத் தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பரிசீலித்து, அது பற்றி ஆலோசனை சொல்லும்பொழுது ஒவ்வொரு எதிர்க்கட்சியும் இது வரையில் சொல்லி வந்திருப்பது, சீக்கிரமாகத் தேர்தலை வைக்க வேண்டுமென்பது தான். ஆனால் அதற்கு நேர் மாறுபட்ட முறையில் இப்பொழுதுள்ள போக்கு போய்க்கொண்டு இருக்கிறது. ஆகவே தான் சொல்கிறேன். இந்தச் சட்டத்தை இன்றைக்கு இங்கே பிரேரேபிப்பது சரியல்ல; இது ஒழுங்கில்லாத சட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1983 மார்ச் 4] [திரு. கு. ரமணி]

அதுமட்டுமல்லாமல், நகராட்சி மன்றங்களை அன்றைக்கு 1975–76 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வாதிகார ஆட்சிக் காலத்தில் கலைத்தார்கள். இந்த அரசு வந்த பிறகு பஞ்சாயத்துக்கள் பூராவையும் கலைத்தார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : 1975–76 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வாதிகார ஆட்சிக் காலத்தில் என்று சொல்கிறார்கள். அது சரியா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நபர் ஆட்சி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பைக் கலைத்து விட்டு ஒரு நபர் உட்கார்ந்து கொண்டு ஆட்சி நடத்தியதைத் தான் சர்வாதிகார ஆட்சி என்று நான் சொல்கிறேன். அது ஜனநாயகம் என்று சொல்வதற்கு அந்தக் கட்சிக்காரர்களுக்கு உரிமை இருக்கிறது ; அவர்கள் பேசும்பொழுது அதைப் பற்றி அவர்கள் பேசிக்கொள்ளலாம் ; அதில் ஆட்சேபணை இல்லை. எனவே, அப்படி அவர்கள் கலைத்தார்கள் ; பிறகு இந்த ஆட்சி வந்த பிறகு பஞ்சாயத்துக்களைக் கலைத்தார்கள். பஞ்சாயத்துக்களைப் பற்றி சுப்ரீம் கோர்ட்டில் கேஸ் இருக்கிறதே தவிர, நகராட்சிகளைப் பற்றிக் கேஸ் இல்லை; மாநகராட்சி பற்றிக் கேஸ் இல்லை. எனவே, மாநகராட்சித் தேர்தலை நடத்துங்கள். இன்றைக்கு வரையில் கோவை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்தவில்லை. அங்கே தேர்தல் நடந்து 12 வருடங்களுக்கு மேல் ஆகிறது. இப்படி நீண்டு கொண்டே போகும் முறையில் இப்பொழுது மறுபடியும் அதன் ஆயுளை நீட்டிக்கின்ற முறையில், ஒரு மனிதனுடைய, ஒரு அதிகாரியினுடைய—விசேஷ அதிகாரியினுடைய ஆட்சியை நீட்டிப்பதற்கான முறையில் இந்தச் சட்டத்தை நீட்டித்தால் அந்த அதிகாரியின் காலத்தையும் நீட்டித்துக் கொண்டு வர வேண்டும். ஆகவே தான் இதுவே தப்பு என்று நாங்கள் சொல்கிறோம்.

இதைச் சொல்லும்பொழுது, அரசியல் சட்டத்தின்படி அசாமில் நடந்த தேர்தலில் கலகம் ஏற்பட்டிருந்தபொழுது கூட, அதை எதிர்த்து நின்றிருக்கிறோம். அரசியல் சட்டத்தின்படி இத்தனை நாட்களுக்குப் பிறகு ஜனாதிபதி ஆட்சியை நடத்த முடியாது என்ற காரணத்தினால் ஜனநாயகத்தை விரும்பக் கூடிய அத்தனை பேர்களும் அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னோம். ஜனநாயகத்தை நிலைநாட்டித் தீர வேண்டுமென்பதற்காகவும், தொடர்ந்து ஜனாதிபதி ஆட்சி நீடித்து வரக் கூடாது என்பதற்காகவும் தேர்தலை நடத்தினோம்.

இங்கேயும் அப்படிப்பட்ட முறையில் தனி அதிகாரியின் ஆட்சி நடத்தப்படக் கூடாது என்று சொல்கிறோம். இந்தச் சட்டத்தைப் பிரேரேபிக்கின்ற இந்த நேரத்திலேயாவது, கோவை

மாநகராட்சிக்கு எப்பொழுது தேர்தலை நடத்தப் போகிறீர்கள் என்பதற்கான தேதியைச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் இந்தச் சட்டத்தை இங்கே பிரேரேபிக்கவே வேண்டாம். நான் மற்ற பிரச்னைகளுக்குள்ளே போகவில்லை.

மாநகராட்சியினுடைய அதிகாரியே சட்ட விரோதமாக நடந்து கொண்டிருக்கிறார்.

ஒரு ஆலோசனைக் கவுன்சில் கூட்டம் கூட இதுவரையில் நடத்தப்படவில்லை. ஏன் என்றால், உங்களிடமிருந்து அவர்களுக்கு உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். மாநகராட்சி ஆனதற்குப் பிறகு அந்த கன்சல்ட்டேட்டிவ் கமிட்டி கூடலாமா இல்லையா என்ற உத்தரவு அமைச்சரிடமிருந்து வர வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். எந்த சட்டத்தினுடைய அடிப்படையில் அது தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதேமாதிரி டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திலே இந்த மாநகராட்சிகளுடைய பிரதிநிதிகள் கலந்து கொள்ளவேண்டுமென்று அதனுடைய தலைவரும் மாவட்ட ஆட்சித் தலைவரும் நாங்கள் அத்தனை பேரும் கேட்டும்கூட அவர்கள் கலந்துகொள்ளமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஏன் என்று சொன்னால், அரசாங்கம் எங்களைக் கலந்துகொள்ளக் கூடாது என்று சொல்லியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இத்தனை சட்ட மீறல்கள் நடைபெறுகிறது. அப்படிப்பட்ட காரியத்தை மேலும் நீட்டிக்கின்ற முறையில் இன்றைக்கு இந்த மசோதா இங்கே நுழைவது தப்பு. அது நுழைவதை நான் எதிர்க்கிறேன். அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதை பிரேரேபிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு இதை எதிர்த்து அமர்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சித் திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யும் இந்த நேரத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலும் இன்று இருக்கக்கூடிய தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் 6 மாத காலம் நீட்டிக்க வேண்டுமென்பதற்காக காரண விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற காரணம் பொருத்தமானதாக இல்லை. வாக்காளர்களுடைய பட்டியல் தயாரிக்கவேண்டியுள்ளது என்று ஒரு கருத்தைச் சொல்லி, அதற்கு 6 மாத காலம் பிடிக்கும், என்வே மாநகராட்சியினுடைய தனி அதிகாரிகளுடைய பதவி காலத்தை நீட்டிக்கவேண்டுமென்று காரண விளக்கத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாநகராட்சியாக அறிவித்ததற்கு பிறகு கிட்டத்தட்ட 3 வருடங்களுக்கு மேல் ஆகியும்கூட இது வரை வாக்காளர்கள் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. இது ஒன்றுதான் தேர்தல் நடத்துவதற்குத் தடையாக இருக்கிறது என்று சொல்வது சரியும் அல்ல, நியாயமும் அல்ல. இப்போது

இருக்கக்கூடிய மாநகராட்சியினுடைய தனி அதிகாரிகளைப் பொறுத்தமட்டிலும், மாநகராட்சி என்று அறிவித்து இருக்கிறார் களே தவிர, மாநகராட்சிக்கு இருக்கக்கூடிய தகுதியை பெற்றிருக் கக்கூடிய ஒரு மாநகராட்சியாக இல்லை. மாநகராட்சிக்கு இருக்கக்கூடிய தகுதிகள் எப்படி இருக்கவேண்டுமோ அல்லது மாநகராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள், செயல் பாடுகள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படிப்பட்ட நிலையில் இல்லை. இன்று இருக்கக்கூடிய மாநகராட்சி தனி அதிகாரி களைப் பொறுத்தமட்டிலும், மாநகராட்சிக்கு உட்பட்டு இருக்கக் கூடிய பல்வேறு பிரச்சனைகள் கோவை மாநகராட்சியில் இருந்து கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் மாநகராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளில் குடி தண்ணீருக்காக மக்கள் ஆங்காங்கே திட்டுத்திட்டாக மக்கள் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல் சாக்கடைத் திட்டம், கொசு ஒழிப்புத் திட்டம், கொசுத்தொல்லையினால் பல நோய்கள் உருவாகின்றன. எனவே நடவடிக்கை எடுக்க வேண்டும், இப்படிப்பட்ட சாதாரண பிரச்னைகளாக இருக்கின்ற, குடிநீர்ப் பிரச்சினை. சாக்கடை வசதி, லைட் வசதிகள் போன்றவைகள் எல்லாம் மாநகராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளில் இப்போது பிரச்சினை யாக இருந்து வருகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் சொன்னதைப் போலவே, விரிவான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டும். 'நான் பதில் சொல்லுகின்ற நேரத்தில் நீங்கள் தடை செய்து விடுகிறீர்கள். அதனால்தான் இதைச் சொல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் குறைத்துக்கொண்டால் நானும் குறைத்துக் கொள்வதற்கு தயா ராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு பக்கமும் குறைத்துக் கொண்டால் நல்லது.

திரு. எம். ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நான் இதைக் கூறுவதற்குக் காரணம் இப்படி பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் தனி அதிகாரிகளுடைய கவனம் இவைகளில் செலுத்தப்படுவ தில்லை. தனி அதிகாரிகளைச் சந்திப்பதற்குக் கூட மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் ஆங்காங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகளை மக்களின் பிரதிநிதிகள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அமைச் சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய காரணம் சரியாக இல்லை. அது மட்டுமல்லாமல் மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்து

TRUTH ALONE TRIUMPHS

வதற்கு எந்தக் கட்சியும் தடையாக இல்லை. எப்போதும் நடத்தலாம். எனவே இந்த பில்லை வாபஸ் பெற்று மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த பில்லை நான் அப்போஸ் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்த அளவில் கடந்த 1981 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதியிலிருந்துதான் இது மாநகராட்சி அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. அதற்குப் பின்னாலே பஞ்சாயத்துக்கள் தேர்தலை நடத்த வேண்டுமென்று முடிவு எடுத்து அதற்குரிய நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருந்தது. ஆகவே இந்த பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில் உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடுகள் சென்றுள்ள காரணத்தால், நகராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தலை நாம் எப்போது நடத்தலாம் என்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம். அதே நேரத்தில் இப்போது கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்த வரைக்கும், அது மாநகராட்சி அந்தஸ்துக்கு உட்பட்ட நேரத்தில் பல்வேறு பஞ்சாயத்துக்கள் இத்தோடு இணைக்கப்பட்டது. ஆகவே வார்டுகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய ஒரு சூந்நிலையும் வந்தது. 60-க்கும் மேற்பட்ட வார்டுகளைக் கொண்ட ஒரு மாநகராட்சியாக மாற்ற வேண்டிய சூழ்நிலைகள் இந்த அரசுக்கு வந்திருக்கிறது.

(முற்பகல் 10-20)

ஆகவே, வார்டுகள் பிரிக்க வேண்டிய நிலையில் நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நாம் நீட்டிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். மேலும், வாக்காளர் பட்டியல் புதிதாகத் தயாரிக்கப்பட வேண்டும். இந்த வேலைகள் 11–6–83-க்குள் முடிக்க முடியாது என்ற காரணத்தால், நாம் மீண்டும் இந்த தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்று இப்போது சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். நாம் ஓராண்டு காலத்திற்கு பதவி நீட்டிப்புக் கேட்டாலும், நாம் இந்தப் பணிகளை ஓராண்டு காலத்திற்குள் முன்பே முடித்து விடுவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அப்படி அந்தப் பணிகள் முடிந்து விட்டால், 6 மாத காலத்திற்குள்ளே முடிந்துவிட்டால்கூட, நாம் உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு இந்தச் சட்ட முன்வடிவில் வழிவகை செய்து இருக்கிறோம்.

அதே நேரத்தில் இந்த கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்தவரையில், நாம் பல்வேறு திட்டங்களை—அந்த நகரத்தை மாநகராட்சி அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு வேண்டிய

1983 மார்ச் 4] [திரு. ப. குழந்தைவேலு]

திட்டங்களை செய்து வருகிறோம். பல்வேறு சாலைகளை புதிய பணிகளாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றி வருகிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரமணி அவர்களுக்கும், திரு. ஆறுமுகம் போன்றவர்களுக்கும் தெரியும். எனக்கு பாராட்டுக்கடிதங்கள் கூட வந்து கொண்டு இருக்கின்றன. இவை களையெல்லாம் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரியும் என்று கூறி என்னைச் சாட்சியாக அழைக்கிறார்.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் தவறான கருத்தை இந்த மாமன்றத்திற்குச் சொல்லி, அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதாடவில்லை. அதற்கு மாறாக கண்முன்பாகக் காட்சி தருகிற வேலைத் திட்டங்களை நீங்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். காரணம், மக்கள் மன்றம் அதை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த மாமன்றத்தின் உறுப்பின ராக இருக்கும் நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்ற கேள்வியைத்தான் நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : மக்கள் மன்றம் ஏற்றுக் கொண்டது. நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். அவர் சொல்ல வேண்டிய பதில் நியாயத்தின் பிரகாரம் என்னவென்று சொன்னால், அங்கே கல்சல்டேடிவ் கமிட்டி ஏன் போட வில்லை ஏன் டி.டி.சி. மீட்டிங் கூட்டவில்லை என்பதாகும்.

மான்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நகராட்சிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. மாநகராட்சிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் இல்லை. சென்னை மாநகராட்சியில் ஆலோசனைக் குழு இல்லை. சென்னை மாநகராட்சிக்குக் ஆலோசனைக்குழு இல்லாத காரணத்தால், கோவை மாநகராட்சிக் கும் ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்படவில்லை. ஆகவேதான் மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்படவில்லை.

இன்று சென்னையில் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால், 150 பேர் போட வேண்டும். அப்படிச் செய்கிறபோது அங்கே ஒரு மாமன்றம் நியமிக்கப்படு கின்ற சூழ்நிலை ஏற்படுகிறதே தவிர அதன் மூலமாக நிலைமை களைச் சரிக்கட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியாது என்ற காரணத்தால் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட வில்லை. ஆனால் நகராட்சிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் ஏற் படுத்தப்பட்டு உள்ளன. அவைகள் கூடி திட்டங்களை நிறைவேற்ற முடியும், நடைமுறைப்படுத்த முடியும். கோவை மாநகராட்சி யைப் பொறுத்தவரையில் அரசே நேரடியாக கவனம் செலுத்தி

பல்வேறு வேலைகளை எடுத்துக் கொண்டு இருப்பதால், அந்தத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், சென்னை மாநகராட்சிக்கு எப்போது தேர்தல் நடைபெறுகிறதோ அந்தக் காலத்திலேயே கோவை மாநகராட்சிக்கும் சேர்த்து தேர்தல் நடத்த இருக்கிறோம். ஆகவே, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (நேற்று (3-3-1983) கூடிய அலுவல் ஆய்வுக் குழு முடிவிற்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5-3-1983 (சனிக்கிழமை) .. 1983-84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளித்தல்.

6-3-1983 (ஞாயிற்றுக்கிழமை) .. விடுமுறை.

7-3-1983 (திங்கட்கிழமை) .. அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.